1990 மார்ச் 21]

அவரவர்கள் இஷ்டத்திற்கு, எங்கோ ஓர் இடத்தில் போய் வைத்துக்கொண்டு அவர்களிடத்திலே அபராதம் என்ற பெயரால் சில தொகைகளைப் பெற்றுக் கொண்டு விட்டு விடுகிறார்கள். இது சம்பந்தமாக, எங்களைப் போன்றவர்களிடத்திலே அவர்கள் வந்து சொன்னால், நாங்கள் போய் கேட்கும்போது, அது எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று ஸ்தலத்திலே இருக்கிறவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இப்படித் தெரியாமலேயே ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது. இதை அரசே ஒருமுகப்படுத்தி இப்படித் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளையெல்லாம் தீர்த்திட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே மதுவிலக்கு குறித்த ஒரு கொள்கை மாற்றம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குக் குற்றங்களால் ஏற்படுகிற சங்கடங்கள் போன்றவற்றிற்காக அபராதம் விதிக்கிறார்கள். அதை கோர்ட்டில் செலுத்தி வந்தார்கள் முன்பெல்லாம். இப்போது மதுவிலக்கு போலீஸ்காரர்களிடம் அந்தத் தொகை இருப்பதால், அதுபோன்ற இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வட்டி யார் தருவது? தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அந்தப் பணத்தைப் போட்டால் வட்டி வரும். வேறு யாரிடமாவது கொடுத்திருந்தாலோ அல்லது பாங்கில் பிக்சட்டில் போட்டாலோ வட்டி வரும், அதைப்பற்றி கவனிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் அரசுக் கருவூலங்களில் அந்தத் தொகையை வைக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருகிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாக நமது தமிழ்நாட்டில் எத்தனை வழக்குகள் பெண்டிங் ஆக இருக்கின்றன என்பதை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்பவுண்ட் செய்யப்பட்ட வழக்குகள் 64,358. நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகள் 3,81,179 என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எஞ்சியுள்ள வழக்குகள் எத்தனை என்ற விபரம் என்னிடத்திலே இல்லை.